# அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## *Ang Mo Kio Tamil Methodist Church*

***8th மார்ச் / March 2026 ஞா யிறு ஆராதனை / Sunday Service***

**Trinity Theological Sunday**

✝ **ஆராதனைக்கு அழைப்பு** — **திரு. கோவிந்தராஜு**
Call to Worship — Mr.Govindaraju

**இறைவணக்கப்பாடல்** — **பாடகர் குழு**
Introit — Choir

**ஜெபம்** — **திரு. கோவிந்தராஜு**
Prayer — Mr.Govindaraju

✝ **தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

**என் அருள் நாதா, இயேசுவே**

*1. என் அருள் நாதா, இயேசுவே!*
*சிலுவைக் காட்சி பார்க்கையில்,*
*பூலோக மேன்மை நஷ்டமே*
*என்றுணர்ந்தேன் என் உள்ளத்தில்.*

*2. என் மீட்பர் சிலுவை அல்லால்*
*வேறெதை நான் பாராட்டுவேன்?*
*சிற்றின்பம் யாவும் அதனால்*
*தகாததென்று தள்ளுவேன்.*

*3. கை, தலை, காலிலும், இதோ!*
*பேரன்பும் துன்பும் கலந்தே*
*பாய்ந்தோடும் காட்சிபோல் உண்டோ?*
*முள் முடியும் ஒப்பற்றதே.*

*4. சராசரங்கள் அனைத்தும்*
*அவ்வன்புக்கு எம்மாத்திரம்!*
*என் ஜீவன் சுகம் செல்வமும்*
*என் நேசருக்குப் பாத்தியம்.*

✝ **மாறி வாசித்தல் 10ம் ஞாயிறு** — **சபையார் இணைந்து**
**“சங்கீதம் 27”** — Congregation

**“கர்த்தர் என் வெளிச்சமுமாயிருக்கிறார்”**

**Psalter Reading “Psalm 27”**

✝ **தந்தை போற்றி** — **சபையார் இணைந்து**
Gloria Patri — Congregation

**துதி ஆராதனை**
Singspiration

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**
Thanksgiving & Pastoral Prayer

**பரமண்டல ஜெபம்** — **சபையார் இணைந்து**
Lord’s Prayer — Congregation

✝ **காணிக்கை பாடல்** — **சபையார் இணைந்து**
Offertory Song — Congregation

**சிலுவை சுமந்த உருவம்**

**சிலுவை சுமந்த உருவம்**
**சிந்தின இரத்தம் புரண்டோடியே**
**நதிபோலவே பாய்கின்றதே**
**நம்பி இயேசுவண்டை வா (2)**

*1. பொல்லா உலக சிற்றின்பங்கள்*
*எல்லாம் அழியும் மாயை*
*காணாய் நிலையான சந்தோஷம் பூவில்*
*கர்த்தாவின் அன்பண்டைவா - சிலுவை*

*2. ஆத்தும மீட்பைப் பெற்றிடாமல்*
*ஆத்துமம் நஷ்டமடைந்தால்*
*லோகம் முழுவதும் ஆதாயமாக்கியும்*
*லாபம் ஒன்றுமில்லையே - சிலுவை*

*3. பாவ மனித ஜாதிகளைப்*
*பாசமாய் மீட்க வந்தார்*
*பாவப் பரிகாரி கர்த்தர் இயேசு நாதர்*
*பாவமெல்லாம் சுமந்தார் - சிலுவை*

*4. நித்திய ஜீவன் வாஞ்சிப்பாயோ*
*நித்திய மோட்ச வாழ்வில்*
*தேடி வாராயோ பரிசுத்த ஜீவியம்*
*தேவை அதை அடைவாய் - சிலுவை*

*5. தாகமடைந்தோர் எல்லோருமே*
*தாகத்தைத் தீர்க்க வாரும்*
*ஜீவத் தண்ணீரான கர்த்தர் இயேசு நாதர்*
*ஜீவன் உனக்களிப்பார் - சிலுவை*

† **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

† **திருமறைப் பாடம்** — **திரு. தனபாலன்**
***சங்கீதம் 51 : 1 – 14*** — Mr. Dhanapalan
Scripture Reading
Psalm 51 : 1 – 14

**அருளுரை** — **திரு. எலிஷா**
Sermon — Mr. Elisha

† **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Offertory & Closing Song — Congregation

**தேவனே உமது கிருபையின் படி**

**தேவனே உமது கிருபையின் படி**
**மா பாவி எனக்கு இரங்கும் – தேவனே**

*1.* உமது மிகுந்த இரக்கத்தின்படி
என் மீறுதல்களை மன்னியும்
அக்கிரமம் நீங்க முற்றிலும் கழுவி
என் பாவமற சுத்தம் செய்யும் - தேவனே

*2.* மீறுதல்களை அறிந்திருக்கிறேன்
வருந்துகிறேன் எந்தன் தேவா
தேவரீர் ஒருவருக்கே
விரோதமாய் பாவம் செய்து
உம் மகிமையை இழந்தேன் - தேவனே

*3.* இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன் அன்று
தாய் பாவத்தில் கற்பம் தரித்தாள்
உள்ளத்தில் உண்மை இருக்க விரும்புகிறீர்
முற்றிலும் கழுவிடும் தேவா - தேவனே

*4.* தேவனே சுத்த இருதயத்தை என்னில்
சிருஷ்டித்து ஆவியை ஊற்றும்
உமது சமூகத்தைவிட்டு தள்ளாமல்
பரிசுத்த ஆவியை ஊற்றும்
பெற்று நிதம் வழி நடத்தும் – தேவனே

**அறிவிப்புகள்**
Announcements

† **மனப்பாட வசனங்கள்** — **சபையார் இணைந்து**
Memory Verses

***சங்கீதம் 102 : 11 - 12*** — Congregation
Psalm 102 : 11 - 12

***11.* என் நாட்கள் சாய்ந்துபோகிற நிழலைப்போலிருக்கிறது;**
**புல்லைப்போல் உலர்ந்துபோகிறேன்.**
***12.* கர்த்தராகிய நீரோ என்றென்றைக்கும் இருக்கிறீர்; உம்முடைய**
**பேர் பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறையாக நிற்கும்**

† **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

† **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

† **சபையார் நிற்கவும் ⁄ Indicates Congregation standing**